# 4th Jaffna University International Research Conference - JUICe2018

# Towards a Safer Future

**CONFERENCE PROCEEDINGS**

27th & 28th September 2018

Faculty of Medicine, University of Jaffna,

Jaffna, Sri Lanka.

Organised by

Technically Co-sponsored by

Ministry of
**Science, Technology & Research**

Sponsored by

Jaffna University International Research Conference 2018 (JUICe 2018)

ISBN No : 978 - 955 - 0585 - 11 - 3

Manuscripts :

Received upto : 30 March 2018

Notification of Acceptance : 30 July 2018

Acceptance of revised papers : 20 August 2018

Published : September 2018

**Editorial Board**

Editor

Dr. S. Thuraisamy Sarma

Associate Editor

Dr. K. Thabotharan

Track Editors

Dr. S. Vasantharuba

- Agriculture & Food Sciences

Dr. R. Vijayakumaran

- Management Studies, Commerce, Entrepreneurship, Tourism & Hospitality Management

Mr. K. L. Ramanan

- Humanities, Social Sciences & Law

Dr. E. C. Jeyaseelan

- Pure & Applied Sciences

Mr. J. Joy Mathavan

- Engineering & Technology

Dr. P. A. Dinesh Coonghe

- Health & Medical Sciences

**Disclaimer**

The full papers published in this proceeding are the views expressed by the respective authors. The statements and opinions stated in these publications do not necessarily reflect the views of the editorial Board of the Jaffna University International Research Conference – 2018.

©JUICe2018, University of Jaffna, Sri Lanka.

URL: http://conf.jfn.ac.lk/juice2018/

Printed by : Harikanan Printers

# யாழ்ப்பாண சமூகத்தில் பெண்கள் எதிர்நோக்கும் வன்முறைகளும் அவற்றுக்கான தீர்வுகளும்

டினோசா இராஜேந்திரன்[1] , சாந்தினி அருளானந்தம்[2]

[1]வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
[2]வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
*dinosha14@hotmail.com[1] , mathushanthini@yahoo.com[2]*

**ஆய்வுச்சுருக்கம் -** பெண்கள் தமக்கென பல்வேறான அங்கீகாரத்தினை சமூகத்தில் கொண்டுள்ள நிலையில், உலகலாவியரீதியில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துக்கொண்டு இருப்பதையும் காணமுடிகின்றது. இதில் யாழ்ப்பாணசமுதாயம் மட்டும் விதிவிலக்கல்ல. குறிப்பாக 2009இல் யுத்தம் நிறைவுற்ற பின்னர் பெண்கள் மீதான வன்முறை அதிகரித்துள்ளதை காணலாம். இன்றைய காலகட்டத்தில் யாழ்ப்பாண சமுதாயத்தில் பெண்களின் வளர்ச்சிவீதம் அதிகரித்துள்ளதோடு, சமத்துவ சிந்தனைகள், சிறப்புரிமைகள் வழுங்கப்பட்டபோதும் வன்முறைகள், மறைமுகமான அழுத்தங்கள் பெண்களை உடல், உளரீதியாக அதிகம் பாதிப்பவையாக உள்ளனஜ4ஸ. பெண்களுக்கு எதிராக மேற்கொள்ளபடும் வன்முறைகள் பற்றிய இவ்வாய்வில், பெண்கள் எத்தகைய வன்முறைகளுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள்? அதற்குப் பின்னணியாகவுள்ள காரணங்கள் யாவை? இவ்வாறான நிலையிலிருந்து விடுபடுவதற்கான வழிமுறைகள் எவையாக இருக்கலாம்? என்பது குறித்து இவ்வாய்வு முன்னெடுக்கப்படுகின்றது. சிறப்பாக யாழ்ப்பாண பெண்களுக்கு எதிராக பிரயோகிக்கப்படும் வன்முறைகளை இனங்காண்பதும் அவற்றுக்கான தீர்வினைக் கண்டு கொள்ளுதலும் நடைமுறைப்படுத்துவதும் இவ்வாய்வின் நோக்கமாகும். இவ்வாய்வானது பல்வேறு நிறுவனங்களில் இருந்தும், தனிப்பட்டவர்களிடமிருந்தும் பெறப்பட்ட தரவுகள், பத்திரிகைச் செய்திகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு விபரண ஆய்வுமுறை மூலம் ஆராயப்படுகின்றது. எடுத்துக்கொள்ளப்பட்ட பிரச்சினை சார்பாக எழுத்துருவில் உள்ள ஆக்கங்களிலிருந்தும்,சேகரிக்கப்பட்ட தகவல்களின் மூலமும் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.யாழ்ப்பாண சமூகத்தில் பெண்களுக்கு எதிராக இடம்பெறும் வன்முறைகளை ஓரளவுக்குத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் வன்முறை நடைபெறும் வீதத்தை குறைப்பதோடு, எதிர்காலத்தில் யாழ்ப்பாண தமிழ்ச்சமூகம் பெண்களிற்கு உயர்பாதுகாப்பை வழுங்கும் பிரதேசம் என்ற அங்கீகாரத்தையும் பெற்றுக்கொள்ள முடியும்.

**திறவுச்சொற்கள்:-** வன்முறை, பெண்கள், தமிழ் சமூகம்,யாழ்ப்பாணம். பாதுகாப்பு.

## I. ஆய்வு அறிமுகம்

யாழ்ப்பாணத்தமிழரின் அடிப்படைவாழ்வு குடும்பத்தைப் பின்னணியாகக் கொண்டதாகும். இதில் ஒரு ஆணும், பெண்ணும் பாரம்பரியமான சடங்கினுடாக இல்லறவாழ்வில் இணைந்து கொள்வதனைக் காணமுடியும். இருப்பினும் ஆண்களே யாழ்ப்பாணத்தமிழர் சமுதாயத்தில் ஆதிக்கமுடையவர்களாகவும், பெண்கள் அவர்களில் தங்கிவாழ்வோராகவும், ஆண்களுக்காக கடமையாற்றுகின்ற தன்மை பெற்றவர்களாகவும் இருந்துவந்தனர். ஆனால் அத்தகைய நிலையானது இன்றையகாலகட்டத்தில் விஞ்ஞான, தொழில்நுட்ப, கல்வி வளர்ச்சியினால் மாற்றமடைந்து வருகின்றது. குடும்ப பராமரிப்பாளராகவிருந்த யாழ்ப்பாணப்பெண்களில் பெரும்பாலானோர் புதிய உலகத்தின் வாய்ப்புக்களினால் சமுதாயத்திற்கு முக்கியமான பங்காளிகளாக மாற்றமடைந்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். இப்புதிய சூழ்நிலையில் பழமையான சமுதாய வழக்காறுகள் மீறப்படுகின்றநிலை காணப்பட்டாலும் இன்று அப்பெண் சார்ந்த குடும்பம் மட்டுமன்றி, சமுதாயமும் வளர்ச்சிப்பாதையில் செல்வதைக் காணமுடியும்[1]. இதன் பின்னணியில் யாழ்ப்பாண சமுதாயத்தில் பெண்களும் உயர்அந்தஸ்துப் பெற்றவர்களாக வளர்ந்துள்ளனர் என்பதை மறுக்கமுடியாது.யாழ்ப்பாண சமுதாயத்தில் அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டு நிலைமைகளில் பெண்கள் உயர்நிலையை நோக்கி முன்னேறினாலும், அவ்முன்னேற்றத்திற்கு இடையூறாக பெண்களுக்கு எதிரான வன்முறைகள் நாளுக்குநாள் அதிகரித்த வண்ணம் உள்ளன. இத்தகைய வன்முறைகள் யாழ்ப்பாண சமுதாயத்தில் பெண்களின் வளர்ச்சிக்குரிய தடைகளை தோற்றுவிக்கின்றது. 'பெண்களின் முன்னேற்றமானது, சமுதாயத்தின் முன்னேற்றம்' என்பதை பெண்களின் அடக்குமுறைக்கு எதிராகக்குரல் கொடுத்த பாரதியார் தன்கவிதைகளிலும், கட்டுரைகளிலும் எடுத்துக்காட்டியுள்ளார். பெண்கள் தொடர்பான அவருடைய ஆக்கங்கள் இன்றைய பெண்களின் முன்னேற்றத்திற்கு ஒரு உந்துதலாக இருந்தது எனலாம்[1].

'நாம் வாழும் இந்நாட்டில் பெண்களை இழிவுபடுத்தும் செயற்பாடுகளை எரிக்கவேண்டும். வாழ்க்கையில் ஆண்களுக்கு பெண்கள் சரிநிகர்'என்று அவர் வன்முறைகளை கண்டித்ததோடு ஆண்களை போன்று பெண்களும் உரிமைகளை அனுபவிக்க உரித்துடையவர்கள்என்பதை வலியுறுத்திய தன்மையையும் காணலாம்[1]. ஆயினும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை முற்றாக ஒழிக்கமுடியாதநிலை இந்த நவீனகாலத்திலும் காணப்படுவது வருந்தத்தக்கதே. இத்தகைய

1. ஜெயக்குமார், அ., பெண்களும் சமூகமும், உமா பதிப்பகம், சென்னை,1991

ஒருநிலையில் வன்முறை என்றால் என்ன என்பதை தெளிவுறுத்திக் கொள்ளுதலும் அவ் வன்முறை தொடர்பான விளிப்புணர்வை சமுதாயத்தில் ஏற்படுத்தி கொள்ளுவதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் இவ் ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது[2].

## II. இலக்கிய மீளாய்வு

பெண்கள் சமூகத்தில் எத்தகைய நிலையில் காணப்பட்டனர் என்பதனை ஜெயக்குமாரின் நூலில் காட்டப்பட்டுள்ளது. அத்துடன் பாரம்பரிய தமிழ் சமுதாயம் ஆரம்பத்தில் இருந்து பெண்களை எவ்வாறு வழிநடத்துகின்றது என்பதனை தெளிவுபடுத்துகின்றது. செல்வியின் நூலின் மூலம் வரலாற்று ரீதியாக பெண்கள் எவ்வாறு வளர்ச்சியடைந்தனர் என்பதுவிளக்கப்பட்டுள்ளது. அத்துடன் தமிழ் சமுதாயத்தை பொறுத்த வரை பெண்கள் எதிர்நோக்கி வருகின்ற அடக்குமுறைகளையும் விளங்கிக் கொள்ளலாம்.[2] யாழ்ப்பாண சமூகத்தில் பெண்கள் எத்தகைய நிலையை அடைந்து கொண்டார்கள் என்பதனை தங்கேஸ்வரியின் யாழ்ப்பாண சமூகம் என்ற நூலின் மூலம் அறிந்து கொள்ளலாம். அத்தோடு யாழ்ப்பாண சமூகத்தில் பாரம்பரிய சமூக கட்டமைப்பினையும் அந்நூலின் மூலம் விளங்கிக் கொள்ளலாம்.[3]

பெண்கள் தமது வாழ்க்கையில் உயர் நிலையை அடைந்து கொள்வதற்கு எத்தகைய விடயங்களைச் செய்ய வேண்டும் என்பதனை பழனிச்சாமி கே.ஜி இன் நூலின் மூலம் விளங்கிக் கொள்ளலாம். அத்துடன் பெண்களின் நல்வாழ்வினை சிறப்பிப்பது சமூகத்தின் கடமை என்பதையும் வெளிக்காட்டப்பட்டுள்ளது.[4] வடமாகாணத்தில் பெண்கள் தமது குடும்பங்களிற்கு தலைமைதாங்குவதன் மூலம் எத்தகைய பிரச்சினைகளிற்கு முகம்கொடுக்க வேண்டியவர்களாக உள்ளனர் என்பதனை அறிந்து கொள்ளலாம். அத்துடன் பெண்கள் யுத்தத்திற்கு பின்னர் எவ்வளவு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களாக காணப்படுகின்றனர் என்பதனையும் தெளிவாக இந்நூல் விளக்கியுள்ளது.[5]

இவ்வாறு பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினை தொடர்பாக பல்வேறு நூல்கள் வெளிவந்திருப்பினும் அந்நூல்களின் மூலம் யாழ்ப்பாணத்தில் பெண்களுக்கு எதிராக நடைபெறும் வன்முறைகளையும் அவற்றுக்கான தீர்வுகளையும்பெற்றுக்கொள்ள இயலாது உள்ளது. இக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக இவ்ஆய்வு முன்னெடுக்கப்படுகின்றது.

## III. நோக்கம்

இவ்ஆய்வின் நோக்கங்களாக பின்வருவன அமைகின்றது.

1. வன்முறை என்றால் என்ன என்பது தொடர்பாக அறிந்து கொள்வதற்கும் அவ்வன்முறை எப்பின்னணியில் உருவாக்கப்படுகின்றது என்பதனை கண்டறியவும்.
2. யாழ்ப்பாணத்துப் பெண்கள் எத்தகைய வன்முறைமூலம் பாதிப்படைந்து வருகின்றனர் என்பதனை அறிந்து கொள்வதற்கும்.
3. யாழ்ப்பாணத்து பெண்களின் மீது பிரயோகிக்கப்படும் வன்முறை சம்பவங்கள் இன்று எத்தகைய தாக்கத்தை எமது சமூகம் மீது செலுத்தி வருகின்றது என்பதனை கண்டறியவும்.
4. இவ்வன்முறைச்சம்பவங்களை குறைத்து எமது சமுதாயத்தை சீர்படுத்த எத்தகைய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்பதனை கண்டறியும் முகமாக இவ் ஆய்வு முன்னெடுக்கப்படுகின்றது.

## IV. கருதுகோள்

"யாழ்ப்பாண சமூகத்தில் பெண்கள் எதிர்நோக்கும் வன்முறைகளும் அவற்றுக்கான தீர்வுகளும்" எனும் இவ் ஆய்வின் கருதுகோள்களாக பின்வருவன அமைகின்றன.

1. யாழ்ப்பாண சமுதாயம் தனக்கென தனித்துவமான கட்டுப்பாடுகளை கொண்டுள்ள சமுதாயமாக காணப்படுகின்றது.
2. இக்கட்டுப்பாடுகள் யுத்தகாலத்திற்கு பிற்பட்ட காலங்களில் தளர்வடைந்து காணப்படுகின்றது.
3. தமிழ்சமுதாயத்தில் ஏற்பட்ட தளர்வு நிலையே இன்று நடைபெற்றுவருகின்ற பெண்களுக்கெதிரான வன்முறைகளுக்கு மூல காரணம் ஆகும்.
4. யாழ்ப்பாண சமுதாயத்தை பொறுத்த வரை நாளுக்கு நாள் பெண்களுக்கெதிராக பல்வேறு வன்முறை சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றது.
5. பெண்களுக்கெதிராக நடைபெற்று வருகின்ற வன்முறைகளை சமுதாயத்தில் இருக்கின்ற அனைவரின் ஒன்றிணைந்தசெயற்பாட்டின் மூலம் கட்டுப்படுத்தலாம் [5]என்பது இவ் ஆய்வின் கருதுகோள்களாக அமைகின்றது.

---

2. செல்வி. தி., தமிழ் வரலாற்று படிமங்கள் சிலவற்றில் ஒரு பெண் நிலைநோக்கு, குமரன் பதிப்பகம், சென்னை,1997.
3. தங்கேஸ்.ப., யாழ்ப்பாணசமூகம், மலர்வெளியீடு, 2007.
4. பழனிசாமி.கே.ஜி, பெண்களுக்காக, கவிதா பப்ளிகேசன், சென்னை, 1987.
5. சரோஜா சிவச்சந்திரன், வடமாகாணத்தில் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், மகளிர் அபிவிருத்தி நிலைய வெளியீடு, யாழ்ப்பாணம், 2011.

**V. வரையறை**

யாழ்ப்பாண சமுகத்தில் பெண்கள் எதிர்நோக்கும் வன்முறைகளும், அவற்றுக்கான தீர்வுகளும் எனும் தலைப்பில் மேற்கொள்ளப்படுகின்ற இவ் ஆய்வானது யாழ்ப்பாண சமூகத்தில் நடைபெற்று வருகின்ற வன்முறை சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது. யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியான 2010 – 2016 வரையான காலப்பகுதிகளுக்குள் நடைபெற்ற வன்முறை சம்பங்களின் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**VI. முறையியல்**

இவ் ஆய்வானது முதல்நிலை தரவுகள், இரண்டாம் நிலைத்தரவுகள் போன்றவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது. குறிப்பாக முதல் நிலைத்தரவுகளான நேர்காணல் மூலம் ஒவ்வொரு நிறுவனத்திலிருந்து சேகரிக்கப்பட்ட வன்முறைச் சம்பவங்களின் புள்ளிவிபரங்கள பெண்களுக்கெதிரான வன்முறை சம்பவங்கள் நிகழ்த்தப்பட்ட சந்தர்ப்பங்கள் தொடர்பாக சேகரிக்கப்பட்ட முதல்நிலைத்தரவுகள் மூலமும்அத்துடன் இரண்டாம் நிலைத்தரவுகளான நூல்கள், சஞ்சிகைகள், கட்டுரைகள் உள்ளிட்ட ஆக்கங்களின் மூலம்சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் தமிழ்ப்பெண்கள் எமது தமிழ் சமுதாயத்தில் எவ்வாறு காணப்பட்டனர் என்பதனையும் யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை தொடர்பாகவும் அறிந்துகொள்ள முடிகின்றது. இவ் இரு தரவுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற இவ் ஆய்வானது விபரணப்பகுப்பாய்வு ஆய்வு முறையியல் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

இருப்பினும்அதிகரித்து வருகின்ற வன்முறையில் இருந்து எமது சமுதாயப் பெண்களினை எவ்வாறு மீட்டெடுப்பது போன்ற இவ் ஆய்வுடன் தொடர்புபட்ட பல தகவல்களை முதல்தர முதல்த்தர தரவுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது.

**VII. பகுப்பாய்வு**

இவ் ஆய்வினை பொறுத்தவரையில் வன்முறை என்பது தொடர்பில் அறிந்துகொள்வதும், அவ் வன்முறை சம்பவங்கள் எச்சந்தர்ப்பத்தில் முன்னெடுக்கப்படுகின்றது என்பது தொடர்பில் அறிந்து கொள்வதும் அவசியமாகும். இந்த வகையில் முதலில் பெண்களுக்கெதிரான வன்முறை என்றால் என்ன என்பது தொடர்பாக விளங்கிக் கொள்ளலாம்.

“மனிதனானவன் தன்னுடைய ஆளுமையை, பிரயோகித்து தனது குறிக்கோளையோ அல்லது தனது வைராக்கியத்தையோ நிலைநிறுத்த முற்படுகின்றபொழுது, தோற்றம் பெறுபவை வன்முறைகள் எனப்படும். இத்தகைய வன்முறைகள் பெண்களுக்கு எதிராக பிரயோகிக்கும் போது அதனை பெண்களுக்கு எதிரான வன்முறைகள் என பொதுவாக அழைக்கலாம்”[8].

பொதுவாக யாழ்ப்பாண சமுதாயத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகளவில் வீட்டு வன்முறைகள், சமுதாயத்தில் இடம்பெறும் வன்முறைகள் என்ற அடிப்படையில் நிகழ்கின்றன.இவ்விரு வன்முறைகளினாலும் இன்றையபெண்கள் சமுதாயம் சீரழிந்துகொண்டு செல்கின்றது. யாழ்ப்பாணசமூகத்தில் நடைபெற்ற வன்முறைகளின் எண்ணிக்கையை நோக்குவோமாயின் எமது சமுதாயத்தில் நிகழும் வன்முறைகளின் விகிதத்தை உணரமுடியும். கடந்த 5 வருடத்தில் நிகழ்ந்த வன்முறைச் சம்பவங்களின் எண்ணிக்கை

| இல | ஆண்டுகள் | யாழ்ப்பாண சமுதாயத்தில் வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | 2010 | 331 |
| 02 | 2011 | 243 |
| 03 | 2012 | 362 |
| 04 | 2013 | 313 |
| 05 | 2014 | 316 |
| 06 | 2015 | 308 |
| 07 | 2016 | 356 |

Source:-women development office ,Jaffna

மேற்படி தரவில் வன்முறைகளின் எண்ணிக்கையினைப் பார்க்கும்போது, 2013, 2014 ஆண்டுகளை விட 2012இல் வன்முறைகள் அதிகளவாயினும் சிறியளவிலான வேறுபாட்டையே கண்டு கொள்ளலாம். மேலும் 2013, 2014 காலப்பகுதியில் வன்முறை அளவில் மிகச்சொற்ப வேறுபாட்டைக் காணமுடிகின்றது. இருப்பினும் 2011ஐ விட இது அதிகமாகும். இதேவேளை அனைத்து வன்முறைச் சம்பவங்களையும் சில தரவுகளை மட்டும் வைத்துக்கொண்டு கூறமுடியாது. எவ்வாறாயினும் மேற்படி தரவிலிருந்து பெண்களுக்கெதிரான வன்முறைச் சம்பவங்கள் குறிப்பிடப்பட்ட ஆண்டுகளில் அதிகரித்து வருவதனை அவதானிக்கலாம்.

இருப்பினும் 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற வன்முறைகள் 2016 இலும் குறைவாக காணப்பட்ட போதிலும் முன்னைய மூன்று ஆண்டுகளை விட வன்முறை சம்பவங்களும் அதனால் பாதிக்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கையும் 2016 இல் அதிகரித்தே காணப்பட்டது. இருப்பினும் பிரதேச செயலகம் யாழ்ப்பாணத்தில் எடுக்கப்பட்ட இவ் எண்ணிக்கையினை மட்டும் வைத்துக்கொண்டு வன்முறை சம்பவங்களினை துல்லியமாகக் கூறமுடியாது. இருப்பினும் பதியப்பட்ட தரவுகளின் படி வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டு செல்கின்றதை காணலாம்.

வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக சேகரிக்கப்பட்ட மற்றுமோர் தரவின்படி பின்வரும் தகவல்கள் கூறப்படுகின்றது.

வலிமை பற்றிய பிரதான கோட்பாடுகளில் ஒன்றான பலவந்த கோட்பாடானது 'பலமானவர்கள் பலவீனமானவர்களை அடக்கி ஆள்வது சிறந்தயுத்தி' என்று கூறுகின்றது. இத்தகைய கருத்துப்பிரயோகம் இன்று பெண்களுக்கு எதிராக உருமாறியுள்ளதென்பதே உண்மை. அதாவது பலமான ஆண்கள், இயல்பிலேயே பலவீனமான பெண்களை தமக்கு கீழ்ப்படியச் செய்யவும் தமது தேவை, விருப்பங்களை பூர்த்திசெய்யவும் இன்று வன்முறையானது பயன்படுத்தப்படுகின்றது[7]. London based minority rights Group (MRF) வெளியிடப்பட்ட அறிக்கையின் படி 2011 – 2012 வரை பல முறைப்பாடுகள் வடமாகாணத்தில் இடம்பெற்ற வன்முறைகளுக்கு எதிராக பதிவு செய்யப்பட்டதாகவும், 2011 ஆம் ஆண்டு 182 முறைப்பாடுகளும், 2012 ஆண்டு பங்குனி மாதத்திற்குள் 56 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி போருக்கு பின்னரான காலப்பகுதிகளில் பெண்களுக்கெதிரான வன்முறைகள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது எனலாம். இவ் வன்முறைகள் தொடர்பில் பதியப்பட்ட அல்லது வெளிவந்த தகவலின் படி (ew) இவ் முறைப்பாடுகள் கிடைக்கபெற்று வருகின்றது. இதன்படியே விகிதங்கள் மதிப்பிடப்படுகின்றது. எனினும் பல பெண்கள் தமது தன்மானம், குடும்பத்தின் கௌரவம் போன்றவற்றை காப்பதற்காக தமக்கு நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களைமூடிமறைக்க முற்படுகின்றனர்.இதனால் பல வன்முறைச் சம்பவங்கள் மறைக்கப்படுகின்றன.

வடமாகாணத்தில் 2014ஆம் ஆண்டிலிருந்து இதுவரையான காலப்பகுதியில் சிறுவர்கள் தொடர்பாகச் சேகரிக்கப்பட்ட புள்ளி விபரங்களின்படி (இதில் சிறுமிகளே அதிகம்) 469 சிறுவர்கள் பாலியல் துஸ்பிரயோகங்களிற்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இன்னுமொருதரவு சிறுவர் துஷ்பிரயோகங்கள் வடக்கில் தீடீரென அதிகரித்துள்ளதைக் காட்டுகின்றது. அதாவது 2015 தை- கார்த்திகை காலப்பகுதியில் இடம்பெற்ற பாலியல் துஷ்பிரயோகத்தினால் 149 சிறுமிகளும் பாலியல் சேஸ்டைகளினால் 18 சிறுமிகளும் உடல் சம்பந்தமான துஷ்பிரயோகத்தினால் 69 சிறுமிகளும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. இதில் பாலியல் ரீதியிலான துஷ்பிரயோகம் யாழ்ப்பாண மாவட்டத்திலேயே அதிகமாகப் (69) பதிவாகியுள்ளதாகவும் அறியப்படுகின்றது.இப்புள்ளிவிபரங்களின்படி சிறுவர்கள் மீதான வன்முறைகள் இன்னும் அதிகரித்துச் செல்வதைக் காணலாம். அதிலும் பெண்பிள்ளைகளின் பாதிப்பு அதிகரித்துவருவது எதிர்கால யாழப்பாணச்சமுதாயத்தில் பெண்களின் நிலைமையை பற்றிய அச்சத்தை மீண்டும் எம்மிடம் ஏற்படுத்திவிட்டது.

**அட்டவணை-01**

GENDER BASED VIOLENCE 2014

| | domestic violence | premarital affairs | socio economic psychosocial | extra marital affairs | sexual abuse | illegal abortion | rape | psychological | other | total |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| jaffna | 16 | 2 | 1 | 1 | 0 | 0 | 0 | 2 | 0 | 24 |
| nallur | 16 | 1 | 2 | 1 | 0 | 0 | 0 | 1 | 0 | 21 |
| sandilipay | 14 | 2 | 0 | 2 | 1 | 0 | 0 | 4 | 0 | 23 |
| chankanai | 18 | 9 | 3 | 3 | 0 | 0 | 0 | 1 | 0 | 34 |
| uduvil | 11 | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 1 | 0 | 14 |
| tellippalai | 3 | 5 | 0 | 1 | 0 | 0 | 0 | 1 | 0 | 11 |
| kopay | 15 | 8 | 1 | 1 | 0 | 0 | 0 | 2 | 1 | 26 |
| chavachcheri | 10 | 7 | 1 | 3 | 0 | 0 | 0 | 0 | 1 | 22 |
| karaveddy | 7 | 0 | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 11 |
| point pedro | 4 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 | 2 | 0 | 5 |
| vellanai | 10 | 2 | 0 | 1 | 0 | 0 | 0 | 0 | 1 | 14 |
| kayts | 6 | 2 | 0 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 9 |
| karainagar | 2 | 2 | 0 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 5 |
| delft | 2 | 1 | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 1 | 6 |
| total | 134 | 47 | 11 | 18 | 1 | 0 | 0 | 13 | 4 | 225 |

**மூலம்:-** TEACHING HOSPITAL JAFFNA

**அத்தரவு பின்வருமாறு**

இதன்படி சங்கானை பிரதேசத்தில் அதிகளவிலான வன்முறை சம்பவங்கள் பதிவாகியுள்ளமை தெளிவாகின்றது. இதற்கு அடுத்த படியாக யாழ்ப்பாண பிரதேசமும் சண்டிலிப்பாய் பிரதேசமும் அடுத்தடுத்ததாக காணப்படுகின்றது. எனினும் தீவகத்தில் ஏனைய மாவட்டத்தை பொறுத்த வரை வன்முறை பதிவுகள் குறைவாக காணப்படுகின்றது என்பது தெளிவாகின்றது.

இவ்வாறு பலதரப்பட்ட இடங்களில் சென்று சேகரிக்கப்பட்ட தரவுகளின்படி 2010 – 2016 வரை வன்முறை சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதுடன். அவற்றுள் பெண்களுக்கெதிரான வன்முறை சம்பவங்கள் அதிகரித்து வருவது இவ் தரவின் மூலம் தெளிவாகின்றது.

யாழ்ப்பாணசமுதாயத்தை பொறுத்தவரையில் 50 வீதமான பெண்கள் வீட்டு வன்முறைகள் மூலம் பாதிக்கப்படுபவர்களாகக் காணப்படுகின்றனர். குறிப்பாக யாழ்ப்பாணத்தில் ஒரு குடும்பத்திற்குள் ஏற்படுகின்ற உள்ளக, வெளியக ரீதியிலான அனைத்து இம்சைகளையும் வீட்டுவன்முறை குறித்து நிற்கின்றது. "வீட்டு வன்முறை என்பது குடும்பத்திற்குள் குடும்ப அங்கத்தவர்களுக்கிடையே, பல்வேறு நிலைப்பாடுகள் தொடர்பில் முரண்படுகின்ற தன்மையே ஆகும். இதன் காரணமாக குடும்பஅங்கத்தவர்கள் மத்தியில், அதிகளவாக உண்டாகும் பிரச்சினைகளால் பெண்கள் உடல், உள ரீதியாக ஏராளமான பிரச்சனைகளுக்கு உள்ளாகின்றார்கள். பெரும்பாலன குடும்பப் பிணக்குகள் வறிய குடும்பங்களிடையே ஏற்படுவதனால் இக்குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் வன்முறைகளின் மத்தியிலேயே வாழ்கின்றனர். வீட்டு வன்முறைமூலம் குடும்ப அங்கத்தவர்களுக்குக் குறிப்பாகப் பெண்களுக்கு ஏற்படும் பாதிப்பானது சமுதாயத்தைப் பாதிப்படையச் செய்கின்றது. ஏனெனில் "குடும்பம் என்பது சமுதாயத்தின் இயல்பானதும், அடிப்படையானதுமான குழு அலகாகும் என்பதுடன் அது சமுதாயத்தாலும் தேசத்தாலும் பாதுகாக்கப்படுவதற்கு தகுதி பெற்றுள்ளது." ஏனெனில் குடும்பநலன் பேணுவதும் வன்முறையைத் தவிர்த்து பாதுகாப்பாக இருப்பதும் சமூகத்தின் வளர்ச்சிக்கு வழிவகுப்பதாகவே அமையும். குடும்பத்தில் பிரயோகிக்கப்படும் வன்முறைகளினால் எதிர்கால தலைவர்களான குழந்தைகள் பாதிக்கப்படுகின்றது[6].

சமூகத்திலும் அதிகளவான பிரச்சனைகளைப் பெண்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. சமூகத்தில் உள்ளவர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற பெண்களுக்கு எதிரான பாலியல் துஸ்பிரயோகம், வரதட்சணை கொடுமை, மனரீதியாக உடல்ரீதியான துன்புறுத்தல் போன்ற சகலவிடயங்களும் சமூக வன்முறைகளிற்குள் உள்ளடங்குகின்றது. சுருங்கக்கூறின் பெண்களிற்கு எதிராக சமூக உறுப்பினர் அல்லது சமூக உறுப்பினர்களினால் பிரயோகிக்கும் உடல், உளரீதியான வன்முறைகள் சமூக வன்முறைகள் எனப்படும். பெண்களுக்கு எதிராக சமூகத்தில் வன்முறையை பிரயோகிக்கும் அங்கத்தவர்களாக அயலவர்கள், உறவினர்கள், நண்பர்கள், அதிகாரிகள் போன்றவர்களைக் குறிப்பிடலாம். இத்தகையவர்களால் பலபெண்கள் நாளாந்தம் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். இன்றைய சமுதாயத்தில் குடும்பத்தில் இருக்கும் உறுப்பினர்களைக் கூடநம்ப முடியாதளவிற்கு சமுதாயம் உருமாறிக்கொண்டு செல்கின்றது. குடும்பத்தில் மட்டுமல்ல வேலைத்தளங்களிலும் அதிகாரமுள்ள தரப்பினரினால் வன்முறைக்குள்ளாகும் நிலையும் பெருமளவிற்கு காணப்படுகின்றது. பொதுவாக யாழ்ப்பாணசமுதாயத்தில் பெண்களுக்கு எதிராக பிரயோகிக்கப்படும் வன்முறைவடிவங்களாக பாலியல் வன்முறை, விபச்சாரத்திற்கு உட்படுத்தல், மானபங்கம் செய்தல், தாக்குதல், மனைவியைத் துஷ்பிரயோகம் செய்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இவ்வாறு வீட்டிலும் தொழில்சார் இடங்களிலும் பலவடிவங்களில் பெண்களுக்கு எதிராக வன்முறை நடாத்தப்பட்டு கொண்டிருக்கின்றது. இத்தகவலினை மேலும் உறுதிப்படுத்தும் வகையில் பின்வரும் நேர்காணல் அமைகின்றதுஐ9ஸ.

**நேர்காணல் - 01**

*பெயர் : S. சுமிதா, வயது – 27, இடம், யாழ்ப்பாணம்.*
*கேள்வி : யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியில் நீங்கள் சிக்கலான நிலையில் இருப்பதாக கூறிநீர் எத்தகைய சிக்கலை எதிர்கொண்டு வருகின்றீர்?*
*"நான் எனது கணவனை கடந்தவருடம் இழந்தேன். எனக்கு இரண்டு குழந்தைகள், எனது பிளளைகளை நான் காப்பாற்றுவேன் என்ற நம்பிக்கையுடன் நான் இருந்தாலும், நான் வாழும் சமுதாயம் கணவனை இழந்தவள் என்ற கண்ணோட்டத்துடன் என்னை பார்க்கின்றது. இதனால் அயலவர்களுடன் கூட (ஆண்களுடன்) சிரித்துப் பேசமுடியாத நிலையில்*

*தற்போது உள்ளேன். எனது பிள்ளைகளின் எதிர்காலத்திற்காக நான் சமுதாயத்தில் இருந்து ஒதுங்கி வாழவேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.”*

இதன்படி விளங்கிக் கொள்வது யாதெனில் யாழ்ப்பாண சமுதாயத்தில் விதவைகள் உள்ளிட்ட பெண்கள் தம்மைப் பொருளாதாரரீதியாக உயர்த்திக் கொள்ளவும், சமுதாயத்துடன் இயல்பாக வாழவும் பெரிதும் சிரமப்பட வேண்டியுள்ளனர். குறிப்பாக ஆண்களைவிட பெண்களையே அதிகமாக தொழில் வழங்குனர்கள் வேலைக்கமர்த்த விரும்புகின்றனர். இதனால் குறைந்த வருமானத்தையும் கூடுதல் நேரத்தையும் பெறவேண்டிய சூழ்நிலையில் பெண்கள் கடமையாற்ற வேண்டியுள்ளது. உடல், உள ரீதியாக பல சவால்களை எதிர்கொண்டு, சுயதொழில் செய்து, அதனால் பலருக்கு வேலைவாய்ப்பை வழங்குவதுமான நடவடிக்கைகளில் சில பெண்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

அண்மையில் யாழ்பல்கலைக்கழகத்தில் வணிகமுகாமைத்துவ பீடத்தில் சுயமுயற்சியாளரின் உற்பத்திப் பொருட்களின் கண்காட்சியும் விற்பனையும் நடைபெற்றது. இதில் கணவனை இழந்த, சுயதொழிலில் ஈடுபடுகின்ற பல பெண்களும் கலந்து கொண்டனர். இதில் பங்குகொண்ட ஒரு பெண் கூறியதாவது,“ நான் சுயதொழிலில் ஈடுபட்டுப் புதிய உற்பத்திப் பொருளை உருவாக்கி, என்னைப் போன்ற சிலபெண்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கியும் வருகின்றேன். இருப்பினும் தொழிலை விஸ்தரிப்பதற்கு எவரும் உதவவில்லை. அதேநேரம் எனது தொழிலில் கையாளும் முறைகளை தெரிவிக்குமாறு சிலர் வற்புறுத்துகின்றனர்” எனக்குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு பல நெருக்கடிகளை சமுதாயத்தில் பெண்கள் அனுபவித்து வருவதனை உணரலாம்.

**நேர்காணல் - 02**

*பெயர் - க. வதனா, வயது – 35, இடம், தெல்லிப்பளை.*
*கேள்வி - தொழில் செய்யும் பெண்ணாக இருக்கும் நீங்கள் எத்தகைய பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றீர்?*
*பதில் -எனது கணவன் யுத்தத்தின் காரணத்தால் அங்கவீனப்படுத்தப்பட்டதால், நான் வேலைக்கு சென்று உழைத்து எனது 04 பிள்ளைகளை காப்பாற்ற வேண்டியுள்ளது. இதனால் வேலைக்கு சென்று வருகின்றேன். ஆனால் இது வரை நான் 07 இடங்களில் இருந்து இடம்மாறி வேலை செய்கின்றேன். ஏனெனில் அங்கு முதலாளிமாரால் பேசப்படும், பார்க்கப்படும் பார்வை தவறாக இருக்கின்றது. என்றார்.*

எமது யாழ்ப்பாண சமுதாயத்தை பொறுத்த வரை போர், கணவன் நோய்வாயப்பட்டிருத்தல், கணவனின் அங்கவீனம், கணவனைப் பிரிந்திருத்தல், கணவன் தடுப்பிலிருத்தல், கணவன் வெளிநாட்டில் இருத்தல், கணவனின் மரணம்,கணவனின் போதைவஸ்துப் பாவனை குடும்ப வருமானத்தில் கணவனின் பங்களிப்பின்மை போன்ற காரணங்களினால் வடமாகாணத்தில் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் பல தோன்றியுள்ளது. 2015 இல் யாழ்ப்பாணத்தில் 29378 பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் காணப்பட்டன. தலைமைத்துவப் பொறுப்பை ஏற்க வேண்டியநிலையில் அவர்களுக்குரிய பிரச்சனைகள் இரட்டிப்பாகின்ற தன்மையினைக் காணலாம். அத்தகைய பெண்களிற் பெரும்பாலானோர் குடும்பவன்முறை, சமூகவன்முறை என இருநிலையினுள்ளும் அகப்பட்டிருப்பது அவர்களது சாதாரணமான வாழ்வுக்குச் சவாலானதாகவே காணப்படுகின்றதெனலாம். இவர்களை அவற்றிலிருந்து விடுவித்து தகுந்த பாதுகாப்பைப் பெற சமூகத்தவர்களும், சமூக நிறுவனங்களும் கணிசமானளவு அக்கறை காட்டவேண்டியது அவசியமானதாகும்[3].

மேற்கூறியவாறு பெண்களுக்கு எதிராக பிரயோகிக்கப்படும் வன்முறைகள் யாவும் அவர்களின் வளர்ச்சியை தடுக்கின்ற செயன்முறைகளாகவே காணப்படுகின்றன. இவற்றைத் தாண்டியும் பல பெண்கள் சாதனையை நிலைநாட்டுகின்றார்கள் என்றால் அந்தளவுக்கு தமது எதிர்காலத்தின் மீது பெண்கள் பூரணநம்பிக்கை உடையவர்களாக இருப்பதே காரணமாகும். ஆண்களில் பலர் பெண்களின் வளர்ச்சிக்கு துணைநிற்பவர்களாக காணப்படுகின்றமையும் கவனிக்கத்தக்கது. பெண்களை விட ஆண்கள் அதிகளவு வன்முறையை பிரயோகிப்பதனாலும், ஆண்களால் ஏற்டுத்தப்படும் வன்முறைகள் அதிகபாதிப்பை தருவதனாலும் அவர்களிடமிருந்து தம்மைப் பாதுகாக்க வேண்டியவர்களாக பெண்கள் காணப்படுகின்றனர். இருப்பினும் பெரும்பாலான இடங்களில் பெண்களின் நலனில் ஆண்கள் பக்கபலமாக இருப்பதும் குறிப்பிடத்தக்கது[10].

**VIII. ஆய்வின் முடிவு**

யாழ்ப்பாண சமுதாயத்தை பொறுத்தவரையில் பெண்களுக்கு கெதிரான பல்வேறு வன்முறைகள் நிகழ்த்தப்படுகின்றது. எனினும் இவ்வன்முறை சம்பவங்கள் அதிகதித்து வருவதனை உடனடியாக குறைக்க வேண்டிய தேவை உள்ளது. அந்த வகையில் உடனடியாக வன்முறைகளை குறைப்பது இயலாத ஒன்று எனினும் பல நடவடிக்கைகளை படிப்படியாக எடுப்பதன் மூலம் எமது சமுதாயத்திலும் வன்முறை சம்பவங்களை குறைக்கலாம். அத்தகைய நடவடிக்கைகளை பின்வருமாறு நோக்கலாம்.


**நேர்காணல் - 03**

பெண்கள் அபிவிருத்தி அலுவலகரிடம் நேர்காணல் மேற்கொண்ட வேளை வன்முறையை கட்டுப்படுத்துவதற்கான தீர்வு பற்றி வினவியபோது அவர் பின்வருமாறு பதிலை அளித்தார்.

> *"பெரும்பாலான பெண்களின் நடவடிக் கைகள் ஆண்களில் தங்கியதாகவே இருக்கின்றது. இதனைப் பலர் தமக்கு சாதகமாக பயன்படுத்த எண்ணுகின்றனர். பெருமளவுக்கு ஆண்களைச் சாராமல் தன்னம்பிக்கையுடன் தமது நடவடிக் கைகளை முன்னெடுக்க முன்வரல் வேண்டும். அவர்களின் துணை முற்று முழுதாக தேவையல்ல என்பது எனது கருத்தல்ல எல்லாவிடயங்களிலும் ஆண் துணை தேவை என்ற மனப்பான்மையை பெண்கள் கைவிட வேண்டும்"*

கல்வி என்பது எல்லாவற்றையும் மாற்றியமைக்கக் கூடிய வல்லமை கொண்டதாகவும், சமுதாயத்தின் வளர்ச்சிக்கான அடித்தளமாகவும் காணப்படுகின்றது. ஏனெனில் "சமுதாயத்தையும், பழக்க வழக்கங் களையும் விளங்கிக் கொண்டு ஒரு ஒழுங்கு முறைக்கு உட்படுத்துவதற்கு கல்வி அறிவு உதவுகின்றது." இன்றைய காலகட்டத்தில் பாலியல் ரீதியான கல்வி பற்றி அதிகம் பேசப்படுவதையும் காணலாம். எனவே பெண்கள் இத்தகைய கல்வி வாயிலாக தன்னைப் பாதுகாத்துக் கொள்ளுதல் வேண்டும். வன்முறை தொடர்பான விழிப்புணர்வினை கல்வித்திட்டங்களினூடாகவும் பெற்றுக்கொள்ள முடியும். வன்முறைக்கு உள்ளான பெண்களை தகுந்த ஆற்றுப்படுத்தலுடன் வழிகாட்டக் கூடிய அமைப்புக்கள் வினைத்திறனுடன் செயற்படுதல் கூடுதலான நன்மையளிப்பதாக அமையும். இவையனைத்தையும் விட பெண்களுக்கெதிரான வன்முறைச்சூழல் எழுவதை தவிர்ப்பதற்குரிய சிந்தனையை சமுதாயத்திற்கு உரியவர்கள் வழங்குதல் கூடுதலான நன்மையளிப்பதாக அமையுமெனலாம். இவ்விடயங்களில் யாழ்ப்பாணசமுதாயத்தில் உள்ள ஒவ்வொரு பிரதேசத்தைச் சேர்ந்த சமுதாயஅபிவிருத்தி சம்பந்தமான அதிகாரிகளும் மற்றும் அமைப்புகளும் கவனம் செலுத்துவதும் அவசியமானதாகும். இவ் தகவலின்படி பாலியல் ரீதியாக பாதிக்கப்பட்டவர்களிற்கு உதவலாம். அதன்படி சமூகத்தில் உள்ள அனைவரும் இவ் பிரச்சினைக்கு சரியான உபாயத்தை வழங்க முன்வரவேண்டும். பெண்கள் தொடர்பாக காணப்படும் மகளிர் அமைப்புக்கள், அரச மற்றும் அரச சார்பற்ற பெண்கள் மற்றும் சிறுவர் பிரிவுகள், போன்றனவும் இவ்விடயம் தொடர்பான, விளிப்புணர்வை ஏற்படுத்த முன்வரவேண்டும்.

உதாரணம் - தேவைநாடும் மகளிர் அமைப்பு, யாழ்ப்பாணம் பெண்கள் மற்றும் சிறுவர் பிரிவு (வைத்தியசாலை, பொலிஸ்நிலையம்) சமூக சிற்பிகள், கொக்குவில், (WD–K.K.S வீதி யாழ்ப்பாணம்) என காணப்படும் பல மகளிர் அமைப்புகளும், அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் மகளிர் மற்றும் சிறுவர் பிரிவும் சரியான முறையில் செயற்படவேண்டும். இதற்கு உதாரணமாக தேவை நாடும் மகளிர் அமைப்பு பெண்களை பாதுகாப்பது தொடர்பில் வெளியிட்ட கைநூல் மற்றும் சிலதுண்டுப் பிரசுரங்கள் பின்வருமாறு.




அமைப்புக்கள் சட்ட ரீதியான அணுகுமுறையின் மூலம் தமது பங்களிப்பை செலுத்தி வருகின்றனர். இதன் மூலம் சமூகத்தில் காணப்பட்ட பலதரப்பட்ட பெண்களுக்கெதிரான வன்முறைகள் ஓரளவு குறைந்து செல்வதனை காணலாம். இவ் அமைப்புக்கள் தொடர்பாகவும் அவ் அமைப்புக்களால்

மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நடவடிக்கை தொடர்பாக, சமூகத்தினருக்கு வெளிப்படுத்த வேண்டும்.

அடுத்து பெண்கள் மீதான வன்முறையில் அடிப்படையான காரணமாக போதைப்பொருட்களின் பாவனையே விளங்குகின்றது. இதற்கு காவல்துறை தரப்பினரும் சில முயற்சிகளை மேற்கொண்டுள்ளமையும் கவனத்திற்குரியது. அவர்கள் போதைபொருள் பாவனையைக் கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைளை மேற்கொண்டு வருகின்றனர்.

**பொலிஸ் அறிவித்தல்**
உங்கள் பிரதேசத்தில் போதைப்பொருள் (ஹெரேயின்) மற்றும் போதைவஸ்து விற்பனைகள் சட்டவிரோத செயற்பாடுகள் முற்றுமுழுதாக இல்லாமல் ஒழிப்பதற்கு உங்களின் ஒத்துழைப்பை தந்துதவுங்கள்.

சகல தகவல்கள் வழங்குவதற்கான தொலைபேசி இலக்கம்
**076 663 3750**

மேற்கூறப்பட்ட சுவரொட்டியில் கூறப்பட்ட விடயத்தில் இருந்து பொலிஸார் போதைப்பொருட்களை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கையில் அதிக கவனத்துடன் செயற்படுகின்றனர் என்பதை விளங்கிக் கொண்டாலும் சரியான தகவல்களை மக்கள் முன்வந்து வழங்க தயங்குகின்றமையினால் எமது சமுதாயத்தில் போதைவஸ்து ஒழிப்பினையும் அதன் பின்னணியில் மேற்கொள்ளப்படும் வன்முறைகளையும் குறிப்பாகப் பெண்கள் மீதான வன்முறைகளை முற்றாக ஒழிக்கமுடியாதுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறான வன்முறையினை கட்டுப்படுத்துவதற்கு யாழ்ப்பாண பிரதேசத்தில் உள்ள அதிகாரிகளும், அரசஅமைப்புக்களும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்கின்றார்களா என்று வினவியபோது அதற்கு பொதுவாக துறைசார் அதிகாரிகள் வழங்கிய பதில் யாதெனில், "யாழ்ப்பாண சமுதாயத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறை நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது. பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரங்களிற்குப் பொறுப்பான அதிகாரிகள் என்ற வகையில் இதற்கான நடவடிக்கைகளையும் அவற்றுக்கான தீர்வுகளையும் பெற்றுக்கொடுத்து கொண்டிருக்கின்றோம். இருப்பினும் இந்நடவடிக்கைகள் தனியொருவர் முயற்சியினால் கட்டுப்படுத்துவது சாத்தியமற்றது. எல்லோருடைய பங்களிப்பும் இருந்தால் எமது சமுதாயத்தில் பெண்கள் மீதான வன்முறையை குறைக்கலாம்"என்பதாகும்.

யாழ்ப்பாண சமூகத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறையானது அதிகரித்து வருகின்றது. இவ்வாறான வன்முறை செயற்பாடானது பெண்களின் உடல் உளத்தை பாதித்துடன் மட்டுமல்லாது அவர்களது எதிர்காலத்தையும் பாதிப்பதாகவே அமைகின்றது. தனிநபர்கள் ஒன்று சேர்ந்து குடும்பம், குடும்பம் ஒன்று சேர்ந்து சமுதாயம் உருவாகின்றது. இவ்வாறாக சமுதாயத்தின் அடிப்படை அலகாக காணப்படுகின்ற குடும்ப அலகில் பெண்களின் பங்களிப்பு முக்கியமானதாக இருக்கின்றது. குடும்பத்தின் பிரதான பங்கினை வகிக்கின்ற பெண்கள் இன்று சமூகத்திலும் பிரதான பங்கினை வகிக்கத் தொடங்கியுள்ளனர். இத்தகைய வளர்ச்சிப் பாதையில் இடையூறை ஏற்படுத்துவதாகவே வன்முறை செயற்பாடு பிரயோகிக்கப்படுகின்றது. இத்தகைய வன்முறை பிரயோகத்தினை கட்டுப்படுத்த சகலரும் தமது பங்களிப்பினை செலுத்த முன்வரவேண்டும். அவ்வாறான ஒரு நிலையில் பெண்களுக்கு எதிரான வன்முறையை எமது சமுதாயத்தில் கட்டுப்படுத்தி அதனை ஏனைய சமுதாயங்களுக்கு முன்னோடியாகத் திகழவைப்பது ஒவ்வொருவரின் கடமையாகும்.

**உசாத்துணை நூல்கள்**

1. சிவத்தம்பி. கா., யாழ்ப்பாண சமூகபண்பாட்டு கருத்துநிலை, குமரன் புத்தக இல்லம். கொழும்பு, 2000.
2. தங்கேஸ். ப., யாழ்ப்பாண சமூகம், மலர்வெளியீடு, 2007.
3. ஜெயக்குமார். அ.,பெண்களும் சமூகமும்,உமாபதிப்பகம், சென்னை, 1991.
4. வெங்கடராமன். சு., பெண்ணியம், தமிழர் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, 1993.
5. நரசிம்மன். எஸ்.எஸ்., பெண்ணியமும் சமூகமும், மருதம் வெளியீடு, 2004.
6. பிரேமா. இ. ரா.,பெண்ணியம், தமிழ்ப் புத்தகாலயம். சென்னை, 2006.
7. பழனிசாமி. கே. ஜி., பெண்களுக்காக, கவிதா பப்ளிகேசன். சென்னை, 1987.
8. செல்வி. தி., தமிழ் வரலாற்றுப்படிமங்கள் சிலவற்றில் ஒரு பெண் நிலை நோக்கு. குமரன் பதிப்பகம், சென்னை. 1997.
9. பாலுமணிவண்ணன்., மண்ணும் பெண்ணும், பாவைப்பப்ளிகேசன், சென்னை. 2008.
10. ராஜம் கிருஸ்ணா., காலந்தோறும் பெண், சென்னை, 1989